அடையாள இலக்கம்:

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2008

அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி – பகுதி 1

**அதிமேற்பிரிவு**
(13-18 வயதுப் பிரிவு)

காலம்: மு.ப. 9.30 மணி, ஞாயிற்றுக்கிழமை

நேரம் : 2.00 மணி

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிக 10 நிமிடங்கள் வழங்கப்படும்

**அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களைப் பிரித்து எழுதுக.**
***புள்ளிகள் : 10***

1. கடற்காற்று : ......................... + .........................
2. முத்தமிழ் : ......................... + .........................
3. அளவில்லை : ......................... + .........................
4. சிற்பக்கலை : ......................... + .........................
5. வாழையிலை : ......................... + .........................
6. மயிற்றோகை : ......................... + .........................
7. நாளெல்லாம் : ......................... + .........................
8. பூந்தோட்டம் : ......................... + .........................
9. கொடுத்திருக்கிறார் : ......................... + .........................
10. வீட்டிலிருந்து : ......................... + .........................

**ஆ) கீழே உள்ள சொற்களைச் சேர்த்து எழுதுக**
***புள்ளிகள் : 10***

1. படம் + கதை = .................................
2. பொன் + நகை = .................................
3. கடல் + கரை = .................................
4. பனை + ஓலை = .................................
5. வலம் + கை = .................................
6. விளக்கு + ஒளி = .................................
7. மா + பழம் = .................................
8. கால் + அடி = .................................
9. படித்து + இருக்கிறான் = .................................
10. கவலை + இல்லை = .................................

| **புள்ளிகள்** | |
|---|---|

**இ) கீழே கோடிடப்பட்ட சொற்களுக்கு மிகப் பொருத்தமான ஒத்தகருத்துள்ள சொல்லைஅடையாளங்கண்டு கோடிட்ட இடத்தில் எழுதுக.**

**புள்ளிகள்: 15**

1. பழந்தமிழர்கள் <u>உணவை</u> மருந்தாகவே கருதினர்
    1. ஆகாரத்தை  2. நீரை
    3. வெப்பத்தை  4. வாசனைத் திரவியங்களை

   (……………………………………)

2. உயர்ந்த மனிதர்கள் <u>சேவை</u> செய்வதை விரும்புகின்றனர்.
    1. வேதனை  2. ஆலோசனை
    3. தொண்டு  4. ஊழல்

   (………………………)

3. <u>இன்பம்</u> என்பது இரண்டு துயரங்களுக்கு இடையில் வருவது.
    1. கவலை  2. மகிழ்ச்சி
    3. வெற்றி  4. வேதனை

   (……………………………………)

4. <u>நோய்</u> இல்லாத வாழ்க்கையே குறைவில்லாத செல்வம்.
    1. துன்பம்  2. வலி
    3. உடல்நலம்  4. சுகவீனம்

   (……………………………………)

5. <u>வீடு</u> என்பது குடும்பத்தவர்கள் மகிழ்வாக வாழ்வதற்கு பெரிதும் உதவுகிறது.
    1. இல்லம்  2. மாளிகை
    3. அந்தப்புரம்  4. அரண்மனை

   (……………………………………)

6. கடலை நம்பியே <u>மீனவர்</u> வாழ்ந்து விடுகிறார்கள்.
    1. குடியானவர்  2. வலைஞர்
    3. மீன் வியாபாரி  4. மாலுமி

   (……………………………………)

7. தமது <u>எண்ணத்தை</u> தெளிவாகத் தெரிவிக்கும் பயிற்சியை இன்றைய இளைஞர்கள் பெற்றுக் கொண்டுவருகின்றர்.
    1. கருத்தை  2. கணக்கை
    3. ஆலோசனையை  4. தந்திரத்தை

   (……………………………………)

8. மக்கள் <u>சிகை</u> அலங்காரம் செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர்.
    1.மேனி  2. தலைமுடி
    3. நகம்  4. முகம்

   (……………………………….…)

9. இலங்கையில் ஏற்பட்ட போரினால் தமிழ் மக்கள் <u>புகலிடம்</u> தேடி அலைகின்றனர்.
    1. பணம்  2. தஞ்சம்
    3. உணவு  4. வாழ்க்கை

   (……………………………………)

10. அரசர்கள் செங்கோல் ஆட்சி செய்வதற்கு நல்ல <u>அமைச்சர்கள்</u> துணை புரிந்தனர்.
    1. மந்திரிமார்கள்  2. இராணிமார்கள்
    3. மக்கள்  4. சிற்றரசர்கள்

   (………………………………….…)

| புள்ளிகள் | |
|---|---|

**ஈ) கீழே கோடிடபட்ட சொற்களுக்கு மிகப் பொருத்தமான எதிர்க்கருத்துள்ள சொற்களை அடையாளங்கண்டு கோடிட்ட இடத்தில் எழுதுக. புள்ளிகள் : 15**

1. அரிச்சந்திரன் நாடகத்தைப் பார்த்த மகாத்மா காந்தி, உண்மை பேசுவதன் உயர்வை பழக்கமாக்கிக்கொண்டார்.
    1. நேர்மையை 2. அநீதியை
    3. பொய்மை 4. மெய்மை

    (……………………………………………)

2. மாமனிதர்கள் பொதுநலம் கருதி வாழ்ந்தனர்
    1. சுயநலம் 2. வெற்றி
    3. உயர்வு 4. மக்கள்நலன்

    (……………………………………………)

3. புதிய ஆடை அணிவது பண்டிகை நாட்களின் ஒரு சிறப்பம்சம் ஆகும்.
    1. நவீன 2. பழைய
    3. வண்ணமான 4. கலாச்சார

    (……………………………………………)

4. சிறிய உதவிகள் கூட மக்களது துன்பத்தை போக்குகின்றது.
    1. சின்ன 2. குறுகிய
    3. நீண்ட 4. பெரிய

    (……………………………………………)

5. சிலர் வளர்பிறை நாட்களில் நல்லகாரியங்களை செய்வார்கள்.
    1. பௌர்ணமி 2. தேய்பிறை
    3. நிலவு 4. அமாவசை

    (……………………………………………)

6. நம் நாட்டில் குளிர்காலத்தில் பகல் பொழுது குறைவாக இருக்கிறது.
    1. காலை 2. மாலை
    3. இரவு 4. நண்பகல்

    (……………………………………………)

7. மனிதர்களது வாழ்வில் இளமைக் காலம் வேகமும் சுறுசுறுப்பும் உடையது.
    1. முதுமைக்காலம் 2. குழந்தைப்பருவம்
    3. படிக்கும் காலம் 4. வேலைசெய்யும் காலம்

    (……………………………………………)

8. மக்களுக்குச் சேவை செய்தோரை எல்லோரும் போற்றினர்.
    1. வாழ்த்தினர் 2. தூற்றினர்
    3. வேண்டினர் 4. வரவேற்றனர்

    (……………………………………………)

9. நிரபராதிகள் தண்டிக்கப்படக் கூடாது என்பதற்காகவே நீதிமன்றங்கள் செயற்படுகின்றன.
    1. கைதிகள் 2. குற்றவாளிகள்
    3. கொலையாளிகள் 4. வழக்கறிஞர்கள்

    (……………………………………………)

10. கணக்குப்பாடம் எனக்கு சுலபமாக இருக்கிறது.
    1. எளிமையாக 2. இலகுவாக
    3. கடினமாக 4. சிறியதாக

    (……………………………………………)

| **புள்ளிகள்** | |
|---|---|

அடையாள இலக்கம்:

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2008

அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி – பகுதி 2

**<u>அதிமேற்பிரிவு</u>**
(13-18 வயதுப் பிரிவு)
காலம்: மு.ப. 9.30 மணி, ஞாயிற்றுக்கிழமை

உ) பின்வரும் ஒவ்வொரு சொல்லையும் கொண்டு அதன் பொருள் விளங்கக்கூடியதாகச் சரியான வசனம் அமைத்து எழுதுக.
*புள்ளிகள் : 20*

1. **காலை** : ……………………………………………………………………………

……………………………………………………………………………………………

2. **காளை** : ……………………………………………………………………………

……………………………………………………………………………………………

3. **கோலம்** : ……………………………………………………………………………

……………………………………………………………………………………………

4. **கோளம்** : ……………………………………………………………………………

……………………………………………..……………………………………..

5. **நீலம்** : ………………………………………………………………………

……………………………………………..……………………………………..

6. **நீளம்** : ………………………………………………………………………

……………………………………………..……………………………………..

7. **பலம்** : ………………………………………………………………………

……………………………………………..……………………………………..

8. **பழம்** : ………………………………………………………………………

……………………………………………..……………………………………..

9. **ஒலி** : ………………………………………………………………………

……………………………………………..……………………………………..

10. **ஒளி** : ………………………………………………………………………

……………………………………………..……………………………………..

| புள்ளிகள் | |
|---|---|

**ஊ) கீழே கொடுக்கப்பட்ட கட்டுரையை வாசித்துப் பின்வரும் கேள்விகளுக்குப் பதில்கள் எழுதுக.**

**புள்ளிகள்: 30**

கல்வியின் தரத்தையும், பயனையும்பற்றி நம் தமிழ் இலக்கியங்கள் மிகுதியாகப் பேசுகின்றன. கல்வி அகன்று விரிவடைந்திருப்பதைவிட ஆழமாக்கப்பட்டு மனிதனின் சிந்தனையை <u>உயர்த்துவதாக</u> அமைந்திருத்தல் வேண்டும். மேலும் அது அன்பையும் கருணையையும் சமூக நோக்கையும் அடிப்படையில் உடையதாகவும் அமைய வேண்டும்.

விண்ணையும் மண்ணையும் இணைக்கும் தொலைத் தொடர்பு, செயற்கைக் கோள் மூலம் சாத்தியமாகியுள்ளது. எத்தனைதான் விஞ்ஞானக் கவர்ச்சி உண்டானாலும் அதன் மூலம் பயன்மிக்க சேவைகளைப் பெற்றாலும் மனிதன் என்ற உயர்நிலைக்கு அடிப்படையாக விளங்கும் அருங்குணங்கள் சில அவனிடம் அமைந்திருக்கவில்லையெனில் விஞ்ஞான சாதனையின் பயன்தான் யாது?

இயற்கையின் அன்பு என்ற ஊற்று மனித உள்ளத்தில் வற்றாமல் சுரக்கவேண்டும். சீரிய சிந்தனைகள் மலரவேண்டும். எவ்வளவுதான் கல்வி கற்று அதன் மூலம் வாழ்க்கை வசதிகளைப் பெற்றுக் கொண்டாலும், அன்பும் கருணையும் அற்ற மனநிலைக்கு இடமளித்தால் கற்ற கல்விக்குப் பயனே இல்லை. ஒருவன் தான் கற்ற கல்வி ஏழு பிறவிக்கும் தொடர்ந்து வந்து பயன் விளைவிக்கும் என்கிறார் திருவள்ளுவர். அன்புள்ளத்தை உருவாக்கும் கல்வியையே அவர் அவ்வாறு கூறுகின்றார்.

தன்னலம் பேணாத உள்ளத்தைக் கல்வி ஒருவனுக்கு அளிக்க வேண்டும். இத்தகைய உள்ளத்தை ஒருவன் பெறவேண்டுமானால் கல்வியில் நல்லொழுக்கத்தைப் போதிக்கும் நீதி நெறிகள் அடங்கிய போதனைகளும் இடம்பெறவேண்டும். கல்வி கற்றுப் பெரிய பதவிகளில் இருக்கும் சிலர்கூடத் தன்னலம் மிகுந்த சமூக அநீதிகளைச் செய்து வருகின்றார்கள் என்பதை இன்றைய வாழ்வில் பார்த்து வருகிறோம். எல்லாத் துறைகளிலும் போலிகளும் சுயநலவாதிகளும் மிகுந்து வருவதையும் நேர்மையும் நீதியும் இரண்டாந்தர நிலைக்குத் தள்ளப்பட்டு வருவதையும் சில நாடுகளில் பார்க்கின்றோம்.

ஒருவன் கற்ற கல்வி, தானும் உயர்ந்து சமூகத்தையும் உயர்த்தும் வகையில் உதவவேண்டும். ஆனால். இதற்கு மாறாக நடப்பவர்களையே நாம் மிகுதியாகக் காணமுடிகின்றது. இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. இக்குறையைக் களையப் பல வழிகள் உண்டு. இவற்றுள் தலையாயது தொடக்கக் கல்வி நிலையிலேயே ஏட்டுக் கல்வியுடன் நன்னெறிகளையும், சமூகப் பண்புகளையும், வரலாறு படைத்த சான்றோரின் வாழ்க்கையையும் இடம் பெறச் செய்வதே ஆகும். இது பிற்காலத்தில் புறத்தே நிலவும் கேடுகள் கற்றோரை பாதிப்புறாவண்ணம் காத்திட உதவும். கற்பித்தல் பழுதற்ற விதையை விதைத்து உரம் போட்டுத் தண்ணீர் விட்ட வளர்ப்பது போன்றது. இதனைக் கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர்கள் சேதப்படுத்தாமல் இருக்க உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். எனவே, அன்பும் கருணையும் பூக்கும் உள்ளத்தை உருவாக்கும் நீதி போதனைகள் பள்ளிகளில் அவசியம் தேவை. இத்தகைய கல்விமுறை அமைந்தால்தான் கல்வியின் பயன் தனிமனித வளர்ச்சியில் செழிப்பான சமூகத்தை உருவாக்க முடியும்.

## வினாக்கள்:

1) எத்தகைய கல்வி பயனுள்ள கல்வியாக அமைய முடியும்?

…………………………………………………………………………………….
…………………………………………………………………………………….

2) விஞ்ஞான சாதனைகள் எப்போது மதிப்பு இழந்து போகும்?

…………………………………………………………………………………….
…………………………………………………………………………………….

3) திருவள்ளுவர் கல்வி எப்போது தொடர்ந்து பயனளிக்கும் என்கின்றார்?

…………………………………………………………………………………….
…………………………………………………………………………………….

4) பள்ளிகளிலே ஏன் நீதி நெறிகள் கற்பிக்கப்பட வேண்டும்?

…………………………………………………………………………………….
…………………………………………………………………………………….

5) கற்றவர்கள் தாம் கற்றபடி நடக்கவில்லை என்பதை நாம் எவ்வாறு அறிகிறோம்?

…………………………………………………………………………………….
…………………………………………………………………………………….

6) ‘‘இக்குறையைக் களையப் பலவழிகள் உண்டு’’ இறுதிப் பகுதியில் இடம்பெற்றுள்ள இவ்வாக்கியத்தில் கட்டுரை ஆசிரியர் எதைக் குறை எனக் குறிப்பிடுகின்றார்?

…………………………………………………………………………………….
…………………………………………………………………………………….

7) கற்பித்தலை எவ்வாறு செடி வளர்த்தலுடன் ஒப்பிடலாம்?

…………………………………………………………………………………….
…………………………………………………………………………………….

8) கீழ்க்காணும் சொற்கள் மேற்கண்ட பகுதியில் இடம் பெற்றுள்ளன. அச்சொற்களின் பொருளை விடைத்தாளில் எழுதுக?

அ) உயர்த்துவதாக
=……………………………………………………………….

ஆ) வற்றாமல்
=……………………………………………………………….

இ) தலையாயது
=……………………………………………………………….

ஈ) உன்னிப்பாக
=……………………………………………………………….

| புள்ளிகள் | |
|---|---|

| மொத்தப் புள்ளிகள் | |
|---|---|